101180

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி - 2021-2022-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு - பள்ளி மாணவ, மாணவியர்கள் தமிழ்மொழி இலக்கியத் திறனை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் 'திறனறித் தேர்வு' நடத்தி ஆண்டுதோறும் 1500 மாணவர்களைத் தெரிவுசெய்து மாதம் ரூ.1500/- வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு வழங்குதல் - 2022-2023-ஆம் நிதியாண்டிற்கு திறனறித்தேர்வு நடத்துவதற்கு ரூ.50,00,000/- மற்றும் மாணவர்களுக்கான ஊக்கத் தொகை வழங்க ரூ.2,47,50,000/- ஆக மொத்தம் ரூ.2,97,50,000/- நிதி ஒப்பளிப்பு செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ 1.1)த் துறை

அரசாணை (நிலை) எண்.89 நாள் 14.07.2022

சுபகிருது, ஆனி - 30

திருவள்ளுவராண்டு 2053

படிக்க:

1. 2021-2022-ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சி மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (தொழில் துறை) அவர்களின் அறிவிப்பு. நாள். 31.08.2021.
2. இயக்குநர்(மு.கூ.பொ),தமிழ் வளர்ச்சித் துறை அவர்களின் கடித எண். 8235 /ஆ.மொ.4 /2021, நாள்: 23.10.2021.

******

ஆணை:-

தமிழ்நாடு சட்டப்பேரவையில் 2021-2022ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சி மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு அமைச்சர் (தொழில் துறை) அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

"பள்ளி மாணவ, மாணவியர்கள் அறிவியல், கணிதம் சார்ந்த ஒலிம்பியாட்டு தேர்வுகளுக்குப் பெருமளவில் தயாராகிப் பங்குபெறுவதைப் போன்று தமிழ்மொழி இலக்கியத் திறனை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் 'திறனறித் தேர்வு' நடத்தப்படும். இத்தேர்வின் மூலம் ஆண்டுதோறும் 1500 மாணவர்களைத் தெரிவு செய்து மாதம் ரூ.1500/- வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப்படும். இதில் 50 விழுக்காடு அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்திற்கு 2021-2022ஆம் ஆண்டு ரூபாய் 2 கோடியே 70 இலட்சமும், 2022-2023ஆம் ஆண்டு முதல் தொடர் செலவினமாக ரூபாய் 5 கோடியே 40 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்."

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநர் கடிதத்தில், மேற்கண்ட அறிவிப்பினை பள்ளி கல்வித் துறை மூலம் செயற்படுத்திடும் பொருட்டு பின்வருமாறு அறிக்கை அனுப்பப்பட்டது :-

i) தமிழ் மொழி திறனறித் தேர்வில் பங்கு பெறும் பள்ளி மாணவர்கள் பாடத்திட்டம், தேர்வு முறை வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பாக வல்லுநர்குழு அமைத்தல் மற்றும் பிற விதிமுறைகள் உட்பட திறனறித் தேர்வில் 50 விழுக்காடு அரசுப் பள்ளி மாணவர்கள் தெரிவு செய்யப்படுதல் உட்பட பிற விதிமுறைகளுடன் கூடிய இத்திட்டத்திற்கு கீழ்க்கண்டவாறு நிதி ஒப்பளிப்பு வழங்கலாம்;

| | | |
|---|---|---|
| 2022-2023ஆம் ஆண்டு | 1500 மாணவர்கள் x 12 திங்கள் xரூ.1500 | ரூ.2, 70,00,000/- |
| 2023-2024ஆம் ஆண்டுமுதல் | 3000 மாணவர்கள் x 12 திங்கள் xரூ.1500 | ரூ.5, 40,00,000/- |

3. மேற்காணும் நேர்வு தொடர்பாக 27.01.2022 அன்று தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வி ஆணையர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கீழ்காணுமாறு தீர்மானிக்கப்பட்டதாக பள்ளிக்கல்வித் துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது:-

i) 11-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மட்டும் மேற்படி தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வினை நடத்திடலாம்

ii) திறனறித் தேர்விற்கான அறிவிப்பினை எதிர்வரும் 2022 ஜுலை மாதத்தில் செய்தி மூலம் வெளியிட்டும் அத்தேர்வினை தொடர்ந்து வரும் ஆகஸ்டு/செப்டம்பர் மாதத்தில் ஒவ்வொரு ஆண்டும் அரசுத் தேர்வுகள் துறையால் NTSE- தேசிய திறனறித் தேர்வைப் போன்றே நடத்திடலாம்.

iii) தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்விற்கு, தற்போது தமிழ்நாடு அரசின் 10-ஆம் வகுப்பு தமிழ் பாடப் புத்தகத்தில் உள்ள பாடத் திட்டங்களே மாணவர்களுக்குப் போதுமானது. இதன்படி 11-ஆம் வகுப்பு பயிலும் விருப்பமுள்ள மாணவர்கள் மட்டுமே இத்தேர்விற்கு விண்ணப்பிக்கலாம். அதற்கேற்றவாறு மாணவர்களின் எண்ணிக்கையினை கருத்தில் கொண்டு தமிழ்மொழி இலக்கியத் திறனை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் திறனறித்தேர்வு நடத்துவதற்கு தேவையான வினாத்தாள் தயாரித்தல், தேர்வு நடத்துதல் மற்றும் விடைத்தாள்களை மதிப்பீடு செய்தல், 1500 மாணவர்களை தெரிவு செய்தல் ஆகிய பணிகளுக்காக ஒரு ஆண்டிற்குத் தேவைப்படும் உத்தேச செலவினத் தொகை சார்பான விவரம் பின்வருமாறு:

V. தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு, தற்போது தமிழ்நாடு அரசின் 10–ஆம் வகுப்பு தமிழ் பாடப் புத்தகத்தில் உள்ள பாடத் திட்டங்களின் அடிப்படையில் நடத்தப்படும். அதன்படி 11–ஆம் வகுப்பு பயிலும் விருப்பமுள்ள மாணவர்கள் மட்டுமே அத்தேர்விற்கு விண்ணப்பிக்கலாம்.

VI. திறனறித் தேர்வுப் போட்டிகள் அனைத்து மாவட்டங்களிலும் அம்மாவட்டத் தலைநகரங்களில் நடத்தப்பட வேண்டும்.

VII. திறனறித் தேர்வில் 50 விழுக்காடு அரசுப் பள்ளி மாணவர்கள் தெரிவு செய்யவும், மீதமுள்ள 50 விழுக்காட்டிற்கு அரசுப் பள்ளி மாணவர்கள் உள்ளிட்ட பிற தனியார் பள்ளி மாணவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

VIII. மேற்படித்தேர்வினை NTSE தேசிய திறனறித் தேர்வைப் போன்றே நடத்திடலாம் என கருதப்பட்டாலும் தற்போது கருதப்படும் தமிழ் மொழி இலக்கிய திறனறித் தேர்வுக்கான பிரிவு வாரியான பாடப்பகுதிகள் மற்றும் அதற்கான மதிப்பெண்கள் தேர்வு கால அளவு மற்றும் பிற விதிமுறைகள் உள்ளடக்கிய வழிகாட்டு நெறிமுறைகள் வகுத்துக்கொள்ள ஏதுவாக பள்ளிக் கல்வி ஆணையரால் அரசுத் தேர்வுகள் இயக்கக இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ் இணையக் கல்விக் கழக இயக்குநர் உள்ளிட்டோர் அடங்கிய வல்லுநர் குழு ஒன்றை அமைத்துக்கொள்ள அனுமதி அளித்தும் மேலும், இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்த பிற கூடுதல் நெறிமுறைகள் ஏதும் தேவைப்படின் மேற்படி வல்லுநர் குழுவே முடிவெடுத்துக் கொள்ள அனுமதியும் அளிக்கப்படுகிறது.

IX. மாநிலம் முழுவதிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர், பயிலும் வகுப்பு, பள்ளி முகவரி, இல்ல முகவரி, செல்பேசி எண், வங்கிக் கணக்கு விவரம் உள்ளிட்ட அனைத்து விவரங்களுடன் மாவட்ட வாரியான பட்டியலை அந்தந்த மாவட்டத்திலுள்ள முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் பள்ளிக் கல்வி ஆணையர் அளவில் பராமரிக்க அறிவுறுத்தப்படுகிறது.

X. அவ்வகையில் திங்கள்தோறும் ரூ.1500/–வீதம் ஊக்கத் தொகை பெறும் மாணவர்களின் வங்கிக் கணக்கில் உரிய வழிமுறைகளின்படி வரவு வைக்க மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு பள்ளிக்கல்வி ஆணையர் வாயிலாக உரிய அனுமதி அளிக்கப்படுகிறது.

XI. மேற்படித் திட்டம் தொடர்பான அனைத்து விவரங்களும் அடங்கிய நிரந்தர அறிவிப்புப் பலகை அல்லது குறிப்பு ஒன்றை அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளிலும் வைக்கப்பட ஏதுவாக, உரிய சுற்றறிக்கை அனைத்து பள்ளிகளுக்கும் அந்தந்த மாவட்ட கல்வி அலுவலர் வாயிலாக அனுப்ப அறிவுறுத்தப்படுகிறது.

XII. 2022–2023–ஆம் கல்வியாண்டில் திறனறித் தேர்வு மூலம் புதிதாக தேர்வு செய்யப்படும் 11–ஆம் வகுப்பு பயிலும் 1500 மாணவர்களுக்கு தலா ரூ.1500 வீதம் 11 மாதங்களுக்கு (ஜுன் 2022 முதல் ஏப்ரல் 2023 கல்வியாண்டு வரை) ஊக்கத் தொகை வழங்க ஆணையிடப்படுகிறது.

XIII. 2022–2023–ஆம் கல்வியாண்டில் 11–ஆம் வகுப்பிலிருந்து தெரிவு செய்யப்பட்டு 2023–2024–ஆம் கல்வியாண்டில் பயிலும் 12–ஆம் வகுப்பு பயிலும் 1500 மாணவர்கள் மற்றும் 2023–2024–ஆம் கல்வியாண்டில் புதிதாக தெரிவு செய்யப்படும் 11–ஆம் வகுப்பு பயிலும் 1500 மாணவர்கள் என மொத்தம்

3000 மாணவர்களுக்கு தலா ரூ.1500 வீதம் 2023–2024–ஆம் கல்வியாண்டில் (ஜுன் முதல் ஏப்ரல் வரை) 11 மாதங்களுக்கு ஊக்கத் தொகை வழங்கவும், அத்தொகையானது ஒவ்வொரு ஆண்டிற்கும் தொடர்ந்து வழங்கவும் ஆணையிடப்படுகிறது.

XIV. மாணவர்களின் எண்ணிக்கையினை கருத்தில் கொண்டு தமிழ்மொழி இலக்கியத் திறனை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் திறனறித் தேர்வு நடத்துவதற்கு தேவையான மேலே பத்தி 3–இல் தெரிவிக்கப்பட்டுள்ள உத்தேச செலவினங்களான வினாத்தாள் தயாரித்தல், தேர்வு நடத்துதல் மற்றும் விடைத்தாள்களை மதிப்பீடு செய்தல், 1500 மாணவர்களை தெரிவு செய்தல் ஆகிய பணிகளுக்காக ரூ.50,00,000/–னை (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) அரசு தேர்வுகள் இயக்கக இயக்குநருக்கு ஆண்டுதோறும் பெற்று வழங்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளித்தும், நடப்பு நிதியாண்டிற்கு ரூ.50,00,000/– (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடப்படுகிறது. மேலும், முதல் இரண்டு வருட செலவினத்தை பொறுத்து வரும் ஆண்டுகளுக்கான நிதி ஒதுக்கீடு முடிவு செய்யப்படும்.

XV. மாணவர்களுக்கான ஊக்கத்தொகைக்கென 2022–2023–ஆம் நிதியாண்டிற்கு ரூ.2,47,50,000/–க்கும் (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்து ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் மற்றும் 2023–2024–ஆம் அடுத்த நிதியாண்டிலிருந்து அதற்கென தொடர் செலவினமாக ரூ.4,95,00,000/–மும் தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்ய நிருவாக அனுமதி வழங்கியும் ஆணையிடப்படுகிறது.

5. மேலே பத்தி 4 இனம் XIV–இல் ஒப்பளிப்பு செய்யப்படும் ரூ.50,00,000/– தொகையினை அரசுத் தேர்வுகள் இயக்கக இயக்குநருக்கு பெற்றளிக்கத்தக்க வகையில் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 4 இனம் XV–இல் ஒப்பளிப்பு செய்யப்படும் தொகையை பள்ளிக் கல்வி ஆணையருக்கு பெற்றளிக்கத்தக்க வகையில் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

6. மேலே பத்தி 4–இல் இனம் XIV மற்றும் XV–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

**"2202 பொதுக் கல்வி – 05 மொழி வளர்ச்சி – 102 இக்கால இந்திய மொழிகள் மேம்பாடும் இலக்கிய மேம்பாடும் – மாநிலச் செலவினங்கள் – AL தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 359 பரிசுகளும் வெகுமதிகளும் – 01 பரிசுகளும் வெகுமதிகளும்"**
**(த.தொ.கு.2202 05 102 AL 35901)**

7. மேலே பத்தி 4–இல் இனம் XIV மற்றும் XV–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ளத் தேவையான நிதியொதுக்கம் ரூ.2,97,50,000/–ம் 2022–2023–ஆம் நிதியாண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கிடு செய்யப்படும், இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2022–2023–ஆம் நிதியாண்டிற்கான துணை மானிய

கோரிக்கையில் சிறப்பு நிகழ்வாக கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 4–இல் இனம் XIV மற்றும் XV–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 4–இல் இனம் XIV மற்றும் XV–இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்தை 2022–2023–ஆம் நிதியாண்டிற்கான துணை மதிப்பீடுகள் திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும், வரைவு விளக்கக் குறிப்பினையும் தவறாது உரிய நேரத்தில் நிதி(தவ(ம)செ/ வ.செ.பொது–I)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. திறனறித் தேர்வுப் போட்டியில் ஆண்டுதோறும் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் விவரங்கள் மற்றும் பயனீட்டுச் சான்றிதழை தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு பள்ளிக் கல்வி ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.34334/ நிதி(தவ(ம)செ)/2022, நாள் 14.07.2022–இல் பெறப்பட்ட இசைவுடனும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.0682 (அறுநூற்று எண்பத்து இரண்டு) (IFHRMS ASL NO.2022070682) உடனும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்:
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
ஆணையர், பள்ளிக் கல்வித் துறை, DPI, வளாகம், கல்லூரிச் சாலை,
நுங்கம்பாக்கம். சென்னை – 6
இயக்குநர், அரசுத் தேர்வுகள் இயக்ககம் DPI, வளாகம், கல்லூரிச் சாலை,
நுங்கம்பாக்கம். சென்னை – 6.

நகல்:
மாண்புமிகு அமைச்சர் (தொழில் துறை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை செயலாளர்
அவர்களின் முதன்மை தனிச்செயலர், சென்னை– 9.
பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
நிதித் (த.வ(ம)செ/வ.செ.பொ II/ வ.வி)
துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

14/7/22

பிரிவு அலுவலர்

14-7-22

உத்தேச செலவினப் பட்டியல்

(சுமார் 2,00,000 தேர்வர்களுக்கு)

| வ. எண் | விவரம் | செலவினத் தொகை(ரூ) |
|---|---|---|
| 1 | வினாத்தாள் தயாரிக்க ஆசிரியர்களுக்கு உழைப்பூதியம் மற்றும் வினாத்தாள் அச்சடித்தல் செய்து சம்மந்தப்பட்ட மாவட்டங்களுக்கு அனுப்புதல் | 22,67,724/- |
| 2 | வாகன வாடகை (Logistics) | 3,50,000/- |
| 3 | OMR கொள்முதல் செய்தல் (GST உட்பட) | 5,60,000/- |
| 4 | OMR மதிப்பீடு செய்தல் (GST உட்பட) | 3,85,000/- |
| 5 | உழைப்பூதியம் | 7,00,000/- |
| 6 | சில்லரைச் செலவினம் | 7,60,000/- |
| | மொத்தம் | 50,22,724/- |

iv) தேர்வர்களின் எண்ணிக்கைக்கேற்ப மேற்காணும் செலவினங்களும் மாறுதலுக்குட்படும். மேற்படி உத்தேச செலவினத் தொகையினை தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநரிடமிருந்து பெற்று வழங்கும் நிலையில் இத்தேர்வினை சிறப்பாக நடத்தி மாணவர்களை தெரிவு செய்யலாம்.

4. அரசின் கவனமான பரிசீலனைக்கு பின்னர், இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை அவர்களின் அறிக்கையினை ஏற்று, தமிழ் வளர்ச்சித் துறையின் 2021-2022ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பினை பின்வரும் வரையரைகளின்படி செயல்படுத்தலாம் என அரசு முடிவு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:-

I. பள்ளி மாணவ மாணவியர்கள் தமிழ் மொழி இலக்கியத் திறனை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் ஆண்டுதோறும் திறனறித் தேர்வு பள்ளிக் கல்வித் துறை வாயிலாக நடத்தப்பட வேண்டும்.

II. 11-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மட்டும் மேற்படி தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு நடத்தப்பட வேண்டும்.

III. திறனறித் தேர்விற்கான அறிவிப்பினை 2022-ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் பத்திரிக்கை செய்தி மூலம் வெளியிட்டும் அத்தேர்வினை தொடர்ந்து வரும் ஆகஸ்டு/செப்டம்பர் மாதத்தில் ஒவ்வொரு ஆண்டும் அரசுத் தேர்வுகள் துறையால் NTSE- தேசிய திறனறித் தேர்வைப் போன்றே நடத்தப்பட வேண்டும்.

IV. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாணவர்கள் அறிந்துகொள்ளும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பெறும் திறனறித் தேர்வு தொடர்பான அறிவிப்பு மற்றும் மாணவர்கள் எவ்வாறு விண்ணப்பிப்பது தொடர்பான (Website) விவரங்கள் அனைத்துச் செய்தித் தாள்களிலும் வெளிவரும் வகையில் செய்திக்குறிப்பு அரசுத் தேர்வுகள் இயக்ககம் வாயிலாக வெளியிடப்பட